**சிந்தை கவரும் சிறுவர் பாடல்கள்** **த.ஜெயசீலன்**

கவிதைத் துறையின் ஒரு பகுதியாக முகிழ்ந்திருக்கும் சிறுவர் இலக்கியம் மிகமுக்கியமானது. சிறுவர் இலக்கியங்கள் சிறுவருக்காக பெரியவர்களால் படைக்கப் படுவன. பெரியவர்கள் தங்கள் அறிவு உணர்வு நிலையிலிருந்து கீழிறங்கி சிறுவர்கள் எனக் கருதப்படும் ஆகக்குறைந்தது பதினான்கு வயதிற்கு உட்பட்டவர்களின் அறிவு, உணர்வு நிலைக்குச் சென்று சிறுவர்களுக்கான இலக்கியத்தைப் படைப்பது என்பது சாதாரணமான விடயமில்லை.

நவீன தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறுவர் இலக்கியத்துறையின் முன்னோடி மகாகவி பாரதிதான். இவன்தான் சிறுவர்களுக்கான பாட்டுக்களைப் பாடி பிரபலப்படுத்தியவன். அவனுக்குப் பின் தமிழகத்தில் அழ.வள்ளியப்பா போன்றோர் அதனை முன்னெடுத்தனர்.

ஈழத்தில் சிறுவர் பாடல்களை ஜனரஞ்சக நிலைக்கு கொண்டுயர்த்தியவர் ‘தமிழ்த் தாத்தா’ நவாலியூர் சோமசுந்தரப் புலவராவார். அவர்பாடிய சிறுவர் பாடல்கள் மிகப் பிரபலமானவை. ‘‘ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலையும்’’. ‘‘கத்தரித் தோட்டத்து மத்தியிலே’’ என்பனவும் சிறுவர் பாடல்தான். அவரின் பின் பாவலர் சத்தியசீலன், கல்வயல் குமாரசாமி, செல்லையா குமாரசாமி ஆகியோர் ஒரு தவம் போல சிறுவர் பாடல்களை யாத்தனர் யாத்தும் வந்தனர்.

சிறுவர் பாடல்கள் தனித்துவமான சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்குவன. கவிதையின் இன்னோரன்ன பண்புகளோடு இருந்தாலும் அப்பண்புகளை அடிப்படையாக கொண்டு வேறு சில விடயங்களையும் கண்டிப்பாக இவை கொண்டிருக்க வேண்டியவை.

இவற்றில் முதன்மையானவை ஓசை நயமும் எளிமையும் ஆகும். சிறுவர் பாடல்களில் சந்தம் ஓசைநயம் என்பன தான் உயிர். எளிமை அதன் உடல். அதன் பாடுபொருள் சிறுவர்களை கவரக்கூடிய சிறுவர்கள் விரும்பக்கூடிய விடயங்களாக இருக்க வேண்டும். இதற்கு மேலாக சிறுவர் உளவியலை உள்ளார்ந்து அவை பேச வேண்டும். இவற்றினூடாக அவர்களின் கபடமற்ற மனதில் அவர்களின் சூழல் பற்றிய, சுற்றம் பற்றிய, வாழ்க்கை பற்றிய, வரலாறு விழுமியங்கள் பற்றிய, சவால்கள் பற்றிய, மனப்படங்களை அவர்களின் மனச்சுவரில் ஓவியங்களாக இப்பாடல்கள் என்றென்றும் தீட்டித் தொங்க விடுவனாக இருக்க வேண்டும்.

சிறுவர்களுடைய வயது, எதையும் ஆர்வமாக தேடிப் பற்றிப் பிடித்துக் கொள்ளும் வயது. நல்லதெது தீயதெது என பகுத்துணர முடியாத வயது. எனவே அவர்களுக்கு சொல்லப்பட வேண்டிய விடயங்கள் எவை? அவற்றை அவர்கள் புரிந்து அவற்றிலுள்ள உண்மைகளை உணர்ந்து எவ்வாறு நடக்கப் வைக்கலாம்?

என்பவை பற்றிய தெளிவான சிந்தனை பொறுப்புணர்வு என்பன பாடலாசிரியருக்கு இருத்தல் மிக மிக அவசியமானது.

ஒருகாலத்தில் பெற்றோர்களும் வீட்டிலுள்ள பாட்டன் பாட்டிமார்களும் பெரியவர்களும் சிறுவர்களுக்கு நல்ல வழிகாட்டிகளாக இருந்தார்கள். இன்று இத்தன்மை மிகமிக குறைந்து விட்டது. எனவே இன்றைய தொழில்நுட்ப அறிவு ஓங்கிய சூழலில் குறிப்பாக இன்றை சிறுவர்கள் நவீன தொழில்நுட்பங்களை எளிதாக உள்வாங்கும் இயல்புடையவர்களாக விளங்குகிற சூழலில், இன்றைய சிறுவர் கல்வியிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டு விட்ட நிலைமையில் அவர்களுக்கு சொல்லவேண்டிய சில விடயங்களையேனும் அவர்கள் மனதில் பசுமரத்தாணி போல பதிய வைக்க சிறுவர்பாடல்கள் இன்றியமையாத தாகின்றன. எனவேதான் சிறுவர் பாடல்களை எழுதுவது என்பது கவிதைகளை எழுதுவதை விட சாதாரணமான வேலை அல்ல என அறிஞர்கள் கூறுகிறார்கள்.

இந்த வகையில் கலாபூஷணம் செல்லையா குமாரசாமி அவர்களுடைய புதிய சிறுவர் நூல் சிறுவர் பாடல்களாக வெளிவந்திருப்பது கவனிப்புக்குரியது. கலாபூஷணம் செல்லையா குமாரசாமி அவர்கள் கவிதை சிறுகதை நாவல் சிறுவர் இலக்கியம் என தனது வயதையும் கருத்திலெடுக்காமல் இடையறாது இயங்குபவர். குறுகிய காலத்தில் கவிதை, சிறுகதை தொகுதியையும், நாவலொன்றையும், சிறுவருக்கான மாயாஜால தொடர் கதை யொன்றையும் நூலுருவாக்கியவர். தற்போது புதிய சிறுவர் பாடல்கள் அடங்கிய தொகுதியை வெளிக் கொணர்கிறார். இது பாராட்டுக்குரியது.

செல்லையா குமாரசாமியின் சிறுவர் பாடல்கள் தனித்துவமானவை. இந்தச் சமூகத்தின் நாளைய சிற்பிகளான சிறுவர்களுக்கு அறிவுரை சொல்லும் பாங்கிலும் எங்கள் அடையாளங்களை அறிவிக்கும் பாங்கிலும் அமைந்தவை. இந்தச் சமூகத்தின் மாற்றம் நாளைய தலைமுறையாலேயே சாத்தியம் என்று நம்புபவை. இன்றைய எங்கள் வாழ்வை, எம் வாழ்முறை யதார்த்தத்தை, சிறுவர்கள் விரும்பி இரசிக்கும் விதமாக பேசுபவை. சிறந்த ஓசை நயம் சந்தம் மாறாது பாடத்தக்கவை. சிறுவர்களின் மனநிலைக்கு இறங்கி அவர்களுக்கு புரியும் வகையில் அறிவூட்டுபவை. பல உதாரணங்கள் நூல் முழுதும் விரவிக் கிடக்கின்றன. பதச்சோறுகள் சிலவற்றின் ஊடாக இவரின் தனித்துவத்தை இனங்காணலாம்.

‘தேர்த்திருவிழா’ வின் அழகை இப்படி சொல்கிறார்

**“பாற்குடங்களோடு பின்னே**

**பாவையர் கூட்டம்.**

**நூற்றுக் கணக்கான ஆண்கள்**

**காவடி ஆட்டம்”…**

**“காட்டுமயில் தோகையிலே**

**கட்டுவர் காவடி**

**நீட்டுக் குழல் மேள இசைக்கு**

**ஆடுவர் பாரடி”**

‘கோடை மழை’ என்ற பாடலில் எச்சரிக்கை ஒன்றை பாடும் சிறுவர்களின் மனதில் பதிய வைக்கிறார்

**“பள்ளம் நிறைத்து வெள்ளம் இப்போ**

**பாயுது கடலை நோக்கி**

**மெள்ள மெள்ள வீட்டுச் சுவரை**

**வீழ்த்தப் போகுது தாக்கி..”** என்று

‘புதிய பள்ளி’க்கு போகும் தங்கையை பார்த்து குதூகலித்து

**“புதிய பள்ளி நாளைக்கு**

**போகப் போறாள் தங்கச்சி**

**புதிய சட்டை சப்பாத் தணிந்து**

**படிக்கப் போறாள் தங்கச்சி”** என்கிறார்.

மரக்கிளையில் காலூன்றி தலைகீழாய் தவம்புரியும் ‘வௌவால்’ பற்றி

**“இரவு நாங்கள் உறங்குகையில் வௌவாலாரே**

**ஊருக்குள்ளே நுழைந்து நீங்கள் வௌவாலாரே**

**மரங்கள் தேடிப் பார்த்தமர்ந்து வௌவாலாரே**

**பழங்கள் தின்று போகலாமோ வௌவாலாரே**

என்றும்

**முட்டையிட்டு அடைகாத்து பறவைகள் எலாம்**

**குஞ்சு பொரிக்கையில் நீங்கள் மட்டுமே**

**குட்டி ஈன்று பாலூட்டிக் குலம் பெருக்கி**

**வாழுவது விந்தையன்றோ வெளவாலாரே….**என்று ‘பறக்கும் பாலூட்டி’ பற்றி பாடம் நடத்துகிறார்.

‘கோழியாரே’ என மீண்டும் எச்சரித்து சிறுவர் மனதில் இரக்கம் ஊட்டுவதற்காக

**“பற்றைக்குள்ளே போகாதீர் கோழியாரே**

**பதுங்கி இருக்கும் பூனை கோழியாரே**

**சர்ப்பங்கள் அங்கு உண்டு கோழியாரே**

**சாப்பிட்டு…விடும் ஏப்பம் கோழியாரே….**என்கிறார். இதில் ‘சாப்பிட்டு…விடும் ஏப்பம்’ புதுமையாக இரசிக்க வைக்கிறது.

மகன் தன் அம்மாவிடம் ‘வேட்டை’ ஆட

கடல்பக்கம் போகட்டுமா? புல்லுக்காடு போகட்டுமா? மலைஏறிப் போகட்டுமா? பனங்காடு போகட்டுமா? எனக் கேட்பது போன்ற கற்பனையின் நீட்சியில்

மகன்: **சந்திரனில் ஏறட்டுமா**

**வேட்டையாட –அம்மா**

**வேட்டையாட?** எனக்கேட்க

அம்மா: **சரித்திரத்தில் பெயர்அருக்கும்**

**நிரந்தரமாக –மகனே**

**நிரந்தரமாக** எனசொல்லும் பதிலினூடாக கற்பனை வளத்தையும் சிறுவர்களை உற்சாகம் ஊட்டி ஊக்கப்படுத்தும் மனப்பாங்கையும் காணலாம்.

யுத்தத்தின் கொடுமையாலும் பின்பு வறுமையின் கோரப் பிடியினாலும் வாடி அலைந்துலையும் எண்ணற்ற சிறுவர்களின் சோகத்தை அந்தச் சிறுவனொருவன் வாயிலாகவே ‘பாடிப் பிழைக்க வந்தோம்’ எனக் கூறும் பாடல்

**“கஞ்சிதானும் காய்ச்சி நாங்கள் குடிக்க வேணும்**

**காலை முதல் வெறும் வயிறு நிரப்ப வேணும்**

**கொஞ்சம் கொஞ்சம் காசு போடும் அதுவே போதும்.**

**குடிசைக்குப் போய்த் தாயைப் பார்க்க வேணும்"**

**சண்டையிலே தந்தையினை நாங்கள் இழந்தோம்**

**சாலை பல கடந்து இங்கு நாங்கள் வந்தோம்.**

**குண்டு பட்டு கால் இழந்த அன்னை கொட்டிலில்**

**குடல் வலிக்க பார்வை வீழும் உண்ணும் தட்டினில்"**

என மனதை கலங்க வைக்கிறது. இந்த நிலையில் இன்றும் வாழும் எண்ணற்ற சிறுவர்கள் எம் மனக்கண்முன் வந்த போகிறார்கள். இப் பாடல் சிறுவர் பாடல் என்பதைத் தாண்டி ஒரு முழுமையான கவிதையாகவும் சிறக்கிறது.

சிறுவர்களுக்கும் சிறிதளவு அரசியல் புகட்ட வேண்டம் என்ற எண்ணம் எழுகிறது இவருக்கு. அதற்கு உதாரணமாக 'உறவுக்குள்ளே சண்டை'

**"நீயா நானா தலைமை எனும்**

**எண்ணம் எழுந்த தாலே**

**ஓயாதவை சண்டையிட்டு**

**வீழ்ந்தன மண்மேலே...**

**உறவுள் சண்டை வளர்வதும்**

**ஊர் இரண்டு படுவதும்**

**ஊறங்கிக் கிடக்கும் எதிரியை**

**உசுப்பி விடுதல் போலுமே!"** என அங்கலாய்க்கிறது.

சிறுவர்களுக்கு வாழ்வில் நற்பழக்க வழக்கங்களின் அவசியத்தைப் போதிக்கும் பாடல்கள் பல உள்ளன. இவர் 'சேமிப்பின்' பெருமையை சிறுவர்கள் பழக, உணர உரைக்கிறார் பாடலாக

**"வீதியில் விற்பனை யாவதை வாங்கி**

**வாயில் வைத்திட ஆசை வரும்.**

**ஆசையை அடக்கி காசினைக் கொண்டு**

**சேமிப்பில் சேர்த்தால் நன்மை தரும்."** என்று அறிவூட்டுகிறார்.

நிலாவையும் பிள்ளையையும் ஒப்பிட்டுகிறது 'பிள்ளை நிலா'

**"அந்தரத்திலே ஓடும்**

**அந்த நிலா – தன்**

**அன்னைமடி தேடும்**

**இந்த நிலா!**

**பெற்றவர் அற்றது**

**அந்த நிலா –பல**

**உற்றவர் உள்ளது**

**இந்த நிலா!**

**வளர்ந்து பின் தேய்வது**

**அந்த நிலா –தினம்**

**வளர்ந்து மகிழ்விக்கும்**

**இந்த நிலா!**

என கண்ணில் ஒற்றிக்கொள்ள வைக்கிறது இந்தப்பாடல். ஆம் காலம் கடந்து வாழப் போகும் இவரின் சொந்தப் பாடல்.

இயற்கையின் பெருமையை மகிமையை சிறியோரும் புரியவேண்டும் என்ற இவரின் வேணவா மிக மிக எளிமையான வரிகள் மூலம் அதனை இப்படிப் பேசுகிறது

**"உறவைக் கூட்டி உண்ணக் காக்கைக்கு**

**கற்றுக் கொடுத்தது யாரு?**

**கற்றுக் கொடுத்தது யாரு?**

**இறந்தால் ஒன்று கூடிக் கதறக்**

**கற்றுக் கொடுத்தது யாரு?**

**கற்றுக் கொடுத்தது யாரு?**

**எல்லாம் எல்லாம் எல்லாம் அந்த**

**இயற்கையின் ஏற்பாடு –அந்த**

**இயற்கையின் ஏற்பாடு"**

'ஆகாயக் கப்பலேறி' என்ற பாடல் எங்கள் உறவுகள் புலம்பெயர்ந்து வாழுவதனை எமது இன்றைய சிறுவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று

**"இலண்டன் பெரு நகரம் போயிறங்கி**

**இயங்கும் தொழிற்சாலைகளோடு இராணி**

**ஏலிசபெத் அரண்மனை, தேம்ஸ் நதியை,**

**எங்கள்ஊர் மக்களையும் கண்டுவருவேன்!"** எனப் பாடுகிறார்!

எங்கள் 'வன்னி வளத்தை'

**"வன்னிக்குப் போய் வருவோம் தம்பி மாரே**

**வளங்களினைப் பார்த்திடுவோம் தம்பிமாரே!**

**பொன்னான பூமி இது தம்பி மாரே!**

**போய்ப்பார்த்தால் விளங்குமே தம்பிமாரே!**

**எங்கிருந்து எவர்வரினும் தம்பி மாரே**

**இடம் கொடுக்குமே வன்னி தம்பி மாரே!**

**தங்கி சில நாளிருந்தால் தம்பி மாரே**

**தகவல் பல அறிந்திடலாம் தம்பி மாரே!"** என்றும் சிறுவர்களூம் பார்க்க வைக்கிறார்.

இவ்வாறு வழமையான சிறுவர்பாடல்களிலிருந்து பல்வேறு அம்சங்களிலும் வேறுபட்டு புதுமை மிகுந்ததாய், அதே நேரம் சிறுவர்களில் அறிவு புரிதல் எல்லையை மீறாததாய், மிக மிக எளிதான வரிகளைக் கொண்டதாய், இசைகூட்டிப் பாட வல்ல சந்த ஓசை நயத்தை கொண்டதாய், காலங் கடந்து நின்று ஈழத்துச் சிறுவர் பாடல்களின் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டதாய்,

கலாபூஷணம் செல்லையா குமாரசாமி அவர்களுடைய இந்நூல் விளங்குகிறது என்றால் மிகையில்லை.